கபிலர் அகவல்

பதிப்பாசிரியர்

இரா. இளங்குமரன்

வெளியீடு :

திருவள்ளுவர் தவச்சாலை

அல்லூர் 620101

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

கபிலர் அகவல்

நூற் பயன்

கபிலர் என்பார் சங்கப் புலவர்.

அவர் பரணரின் நண்பர்; பாரியின் தோழர்.

தலை சிறந்த தமிழ்க் கொடையாளி.

புலவர்களும் புரவலர்களும் ஒருங்கே பாராட்டிய புகழாளர்.

புலவர் கபிலர் சிறப்பு, நாடறிந்ததாயிற்று. அதனால் அந்நாள் தொட்டு இந்நாள் வரை, பற்பலரும் தம் மக்களுக்கும் மக்கள் மக்களுக்கும் அவர் பெயர் சூட்டி மகிழ்ந்தனர்; மகிழ்கின்றனர்.

ஆதலால், கபிலர் என்னும் பெயர் கொண்ட பெரு மக்கள் பலராயினர். அவருள் ஒருவர், இவ்வகவல் பாவைப் பாடியவர்.

முதற்கபிலர் சங்க காலத்தவர்; இவ் அகவல் பாடிய கபிலரோ பிற்காலத்தவர்.

தமிழ் நாவலர் சரிதையில் இவ்வகவல் பற்றிய செய்தி இடம் பெறுகிறது. ஆதலால் அக்காலத்திற்கு முற்பட்டவராக இக்கபிலர் இருந்திருக்க வேண்டும் என்றும், "அக்காலம் 15ஆம் நூற்றாண்டு" என்றும் இலக்கிய வரலாறு கூறும் (தமிழ் இலக்கிய வரலாறு 15ஆம் நூற்றாண்டு; மு. அருணாசலம், பக். 310)

திருவள்ளுவர் முதலான அறுவர்க்கு உடன் பிறந்தவர் இவர் என்பதும், ஆதிக்கும் பகவனுக்கும் பிறந்தவர் என்பதும் இதிலுள்ள செய்தி. இச் செய்தி பிற்காலத்தில் வள்ளுவரோடு இணைத்து இட்டுக் கட்டப்பட்டது என்பது இப்பாடலில் வரும் சொல்லமைதிகளால் புலப்படும். ஆனால் இப்பாடல் கூறும் 'பொதுமையறம்' இக்காலத் தமிழ் உலகுக்கு இன்றியமையாத் தேவையானது.

இவ்வகவல் பற்றி **அபிதானசிந்தாமணி** கூறும் செய்தி:

"வள்ளுவருடன் பிறந்தவர்; இவர் பிறந்த போது தாய் விட்டுப் பிரிய வருந்துகையில்,

'கண்ணுழையார்க் காட்டில் கருங்கல் தவளைக்கும்
உண்ணும் படியறிந் தூட்டுமவர்—நண்ணும்
நமக்கும் படியளப்பார் நாரியோர் பாகர்
தமக்குத் தொழிலென்ன தான்'

என்னுங் கவி கூறினார்.

இக்கவி கேட்டுத் தாய் பிரிந்த பின் ஒரு வேதியன் வீட்டில் வளர்ந்து உபநயன காலத்தில் மற்ற வேதியர் 'இவன் வேதியன் அல்லன்' என்று மறுக்க அவருடன் '**கன்மத்தால் சாதியன்றிச் சன்மத்தால் சாதி இல்லை**' என்று வாதிட்டு நீங்கித் தம் பெயரால் கபிலரகவல் பாடித் தவம் செய்தவர்' என்பது.

வேதியரைக் கண்டிக்கும் பகுதி இப்பாடலில் உள்ளது. பிறப்பு ஒக்கும் என்னும் பெருநெறி, இயற்கை முறைப் படியும் அறிவியல் நெறிப்படியும் அருமையாய் விளக்கப் படுகின்றது.

அகவற்பாவின் சொல் ஓட்டமும் பொருள் அமைதியும் பாலும் தேனும் இணைந்தாற் போலக் கற்பார்க்குச் சுவையூட்டி நெஞ்சத் திரையில் ஓவியமாகப் பதிவுறு கின்றன.

"ஒன்றே செய்யவும் வேண்டும்; அவ்வொன்றும்,
நன்றே செய்யவும் வேண்டும்; அந் நன்றும்,
இன்றே செய்யவும் வேண்டும்; அவ்வின்றும்,
இன்னே செய்யவும் வேண்டும்"

என்பது நம் செவிக்குப் புதியதா?

"மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ?
காற்றும் சிலரை நீக்கி வீசுமோ?
மாநிலம் சுமக்க மாட்டேன் என்னுமோ?
கதிரோன் சிலரைக் காயேன் என்னுமோ?
வாழ்நான்கு சாதிக் குணவு நாட்டிலும்
கீழ்நான்கு சாதிக் குணவு காட்டிலுமோ?
திருவும் வறுமையும் செய்தவப் பேறும்
சாவதும் வேறிலை தரணி யோர்க்கே;
குலமும் ஒன்றே; குடியும் ஒன்றே;
இறப்பும் ஒன்றே; பிறப்பும் ஒன்றே;
வழிபடு தெய்வமும் ஒன்றே"

இப் பகுதி பகுத்தறிவாளர்க்குப் பசுமரத்தாணியெனப் பதிந்தது தானே!

"சாதி என்னும் படை நோய்க்கு—படர் நோய்க்கு—மருந்து" என்று பாரதியார் பாடலைக் குறித்துக் காட்டினாரே பாவேந்தர்! அப்பாரதியார்,

"எல்லாரும் ஓர்குலம்; எல்லாரும் ஓரினம்;
எல்லாரும் இந்திய மக்கள்;
எல்லாரும் ஓர்நிறை; எல்லாரும் ஓர்விலை;
எல்லாரும் இந்நாட்டு மன்னர்"

என்றாரே; அதன் மூல முரசம் இக் கபிலர் அகவல் ஆகும் அன்றோ!

'ஆன்ற சிறப்பின் அரும் பொருளை'க் கூற விரும்பும் கபிலர், வினாவில் தொடங்குகின்றார். வினா ஒன்றா? இரண்டா? 24 வினாக்கள் (1—16) அடுத்து உலகவரை அழைத்து நிலையாமை (17-45) இறப்புச் சடங்கு (46-57) பற்றிக் கூறுகிறார். அதன்பின், இறப்புச் சடங்கு நடத்தும் பார்ப்பனரை அழைத்துச் சடங்கின் இழிமையையும், பிறப்பில் உயர்வு தாழ்வு இல்லாமையையும் விரிவாக விளக்குகிறார் (58—99) தாம் **பகவன், ஆதி** என்பார் மகவு என்பதையும் தம்மொடு பிறந்தார் இவர் இவர் என்பதையும் கூறுகிறார். (100—120) நிறைவாக உலகின் பொதுமைச் சிறப்பைப் புகல்கின்றார் (121—140)

"மேல்வகை கீழ்வகை விளங்குவது ஒழுக்கத்தால்" (71)

என்றும்,

"வாழ்நாள், உறுப்பு, மெய்வண்ணமோடு, அறிவினில்
வேற்றுமை யாவதும் வெளிப்படல் இன்றே" (86—87)

என்றும்,

"சிறப்பும் சீலமும் அல்லது
பிறப்பு நலம் தருமோ போதையீரே"

என்றும் கூறுவன.

ஒழுக்கமே உயர் பிறப்பு ஒழுக்கம் இல்லாமை இழிபிறப்பு (ஒழுக்கம் உடைமை குடிமை திருக். 133) என்பதை விளக்கும்.

"பெற்றமும் எருமையும் பிறப்பினில் வேறே
அவ்விரு சாதியில் ஆண்பெண் மாறிக்
கலந்து கருப்பெறல் கண்ட துண்டோ?"

என்றும் (பெற்றம் — பசு),

ஒருவகைச் சாதியாம் மக்கட் பிறப்பில் ஈர்
இருவகை யாக நீர் இயம்பிய குலத்துள்
ஆண் பெண் மாறி அணைதலும் அணைந்தபின்
கருப்பொறை உயிர்த்தலும் காண்கின் றிலீரோ?

என்றும் வினாவுவவற்றை எள்முனை அளவு அறிவுடன் எண்ணினும் சாதிப் பிறப்பைக் கற்பித்த கண்மூடித் தனமும், அக்கண்மூடித் தனத்தைக் கட்டியழும் சிறுமையும் புலப்படுமே!

சாதி என்பது தொல்காப்பியச் சொல். விலங்கினம் என்பது, விலங்குச் சாதி என்றும்; பறவை இனம் என்பது பறவைச் சாதி என்றும் குறிக்கப்படுவது. சாதியைக் கொடையால் கண்டது ஔவை மொழி. தமிழச் சாதி என்று மொழி வழிப் பிரிவுக்கு ஆக்கியவர் பாரதியார். இடைக்காலத்தே சாதியைக் கண்டித்தோர் பலர்; அவருள் தலை நின்றவர் வள்ளலார்.

சாதிக் கொடுமை, சாதி வெறி என்பவை மக்கள் இனத்தைக் கெடுத்துவரும் கேட்டை எண்ணிய அறவோர், அதனை ஒழிக்க முனைந்தனர். ஆனால், குடியாட்சித் தேர்தலும் கட்சி அரசியலும் சாதி வெறியைக் கொழுந்து விட்டு எரியும் எரியாக்கிக் குளிர் காய்ந்து வருகின்றன. சாதிச் சலுகை என்னும் பெயரால் சாதிமை ஒழியாமல் இருக்க மக்கள் இயக்கங்களும் முனைந்து நிற்கின்றன.

காட்டுத் தீயால் கரிந்து கிடக்கும் காடு போலச் சாதி வெறித் தாக்குதலால் தமிழினம் தன்னைத் தானே அழித்துக் கொள்ளும் இழி வழியை மேற்கொண்டு வருகின்றது.

"உங்கள் சாதி — வருணம்— என்ன?" என்று கேட்பதற்கு வெட்கமுற்ற பண்பாளர் — படிப்பாளர்— என்பாரும், சாதிச் சங்கக் காவலர் என்னும் பெருமையில் இந் நாளில் உலா வருகின்றனர்.

தமிழ் மன்றம் — கழகம் — சங்கம், என்பன திகழ்ந்த ஊர்களில், சாதி அமைப்புப் பலகைகள் பளிச்சிடல் காண்பார் நாணித் தலைகவிழச் செய்கின்றன.

"எச்சாதி அமைப்பு ஆயினும் தமிழரைத் தமிழர் அழிக்க அமைந்த நச்சு வளையமே" என எண்ணும் 'தமிழர் உறவின் முறை' கட்டாயம் தேவை.

தமிழினம் எவ்வகைக் காரணம் காட்டியும் பிரிந்தும் பிளந்தும் பிணங்கியும் நிற்றல் தமிழினக் கேடே! தமிழின அழிவே!

"அதோ, அவன் என் சாதியான்" என்று எண்ணு பவனும் "அவன் இன்ன சாதியான்" என்று நினைப்பவனும் தமிழினக் கேடனே!

பார்ப்பனரை நோக்கி இப்பாடல் இடித்துக் கூறுவதாகக் கூறி, வசைக்குப் பயன்படுத்துவார் உளர்; அவர் ஓரப் பார்வையர்!

பார்ப்பனரிடம் மட்டுமா இன்று சாதி வெறி உள்ளது? சாதிவெறி இல்லாச் சாதி எது? குடியரசே சாதி அரசாக ஆக்கி விட்டது தானே, தேர்தல். அதன் எரிகொள்ளியும் தீப்பந்தமும் தாமே சாதிமை அரசியல் கட்சிகள். தமிழரைத் தமிழரே அழித்துக் கொள்ளத் தமிழகம் கொண்டுள்ள சாதி வெறிக் கூட்டு, ஒட்டு மொத்தமாகத் தமிழரை அழிக்கும் நச்சுப் பொய்கை!

சாதிமையைச் சல்லி சல்லியாய் உடைத்துச் சாலைக் கல்லாக்கி நடையிட வாய்க்கும் வகை இரண்டு. ஒன்று,

மணமாற்றம். மற்றொன்று **மணமாற்றம்.** முன்னது, **அரும் பெரும் தலைமை;** பின்னது, **இயற்கை ஒப்புரவுக் காதல் வாழ்வு!**

முன்னதை **ஊட்டுதலும்,** பின்னதை **ஊக்குதலும்** சான்றோர் கடமை!

அக் கடமையைக் கருதிக் கருதிக் கடனாற்றி வருவது திருவள்ளுவர் தவச்சாலை! இக்கால நிலையில் தமிழறம் என்பது இது தானே!

சாதிமை கருதாத தமிழ் மணங்களைச் செய்ய விரும்புவார் தவச்சாலையை அணுகுகின்றனர். அத்தகு மணங்கள் நடைபெறத் தவச்சாலை பெரும் பங்களிப்புச் செய்து பரப்புகின்றது.

எங்கள் சாதியில் எங்கள் மக்களுக்கு மணம் வேண்டா; "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்னும் பெருநெறி மணமே வேண்டும் என்றும் வணங்கத் தக்க பெற்றோரும் உருவாகி வருதல் உவகையாகின்றது.

காதல் மணம் கொண்டு, எடுத்துக் காட்டாக வாழ்வாரைத் தவச்சாலை "**நெஞ்சம் கலந்த நேயர்**" என விருது வழங்கிப் பாராட்டி மகிழ்கின்றது.

நெய்வேலியில் 'குழந்தை நலம்', 'மகப் பேறு' மருத்துவ மனை ஒன்று: இந்திரா நகரில் இயல்வது. அதன் பெயர் 'தமிழறம்' என்பது (பெற்றோர் பெயர் இணைந்து நிற்கும் இனிமைப் பெயர்.)

தமிழரசியாரும் **அறவாழி**யாரும் ஆகிய இணையரின் தலைமகனார் **செந்தில்.** அவர் ஆங்கிலமுறைப் பண்டுவர். அவர்தம் அன்புத் துணைவியார் அகிலா. அவரும் ஆங்கில முறைப் பண்டுவர்.

தனித் தமிழ் இயக்க வழிஞராகிய செந்திலும் அகிலையும் நெஞ்சங்கலந்த காதலில் ஒன்றிக் கடிமணம் புரிந்தவர்கள். அக் குடும்பம் தவச்சாலை அறங்காவல் குடும்பம். அவர்கள் தொடங்கும் புதிய மருந்தகப் பொலிவாக வெளிப்படுத்தப் படுவது இக்கபிலர் அகவல்!

உடல்நல மருத்துவர் கொடைநூல்,
உளநல மருத்துவத்திற்கு
உறுதுணை ஆவதாக!

"சாதி எதுவென்றால் பாப்பா — அவரைக்
காறி உமிழ்ந்திடுவாய் பாப்பா!
வேதம் உரைத்ததென்றால் பாப்பா —அதை
வேகவைப்பாய் தீயினிலே பாப்பா!"

என்பது எம் இளந்தைப் பருவத்தில் இளையர்க்கு எழுதிய பாட்டு!

இரா. இளங்குமரன்

கபிலர் அகவல்

ஆற்ற லுடையீர் ஆய்ந்து கூறுவீர்

நான்முகன் படைத்த நானாவகை உலகில்
ஆன்ற சிறப்பின் அரும்பொருள் கூறுங்கால்
ஆண்முதிதோ? பெண்முதிதோ? அன்றி அலிமுதிதோ?
நாள்தான் முதிதோ? கோள்தான் முதிதோ?
நல்வினை முதிதோ? தீவினை முதிதோ?
செல்வம் சிறப்போ? கல்வி சிறப்போ?
தொல்லைமா ஞாலம் தோற்றமோ! படைப்போ?
எல்லாச் சிறப்பும் இயற்கையோ சேர்க்கையோ?
காலத்தாற் சாவரோ? பொய்ச்சாவு சாவரோ?
நஞ்சுறு தீவினை துஞ்சுமோ? துஞ்சாதோ?

துஞ்சும் போதந்தப் பஞ்சேந் திரியம்
என்செயா நிற்குமோ? எவ்விடத் தேகுமோ?
ஆற்றல் உடையீர், அருந்தவம் புரிந்தால்
வேற்றுடம் பாகுமோ? தமதுடம் பாகுமோ?
உண்டியை உண்குவ துடலோ? உயிரோ?

கண்டின் புறுவது கண்ணோ? கருத்தோ?
உலகத்தீரே உரைப்பது கேட்க
உலகத் தீரே! உலகத் தீரே!
நாக்கடிப் பாக வாய்ப்பறை அறைந்து
சாற்றக் கேண்மின்; சாற்றக் கேண்மின்;

மாந்தர் வயது

மனிதர்க்கு வயது நூறல்ல தில்லை;
ஐம்ப திரவில் அகலும் துயிலினால்;
ஒட்டிய இளமையால் ஒரைந்து நீங்கும்;
ஆக்கை இளமையில் ஐம்மூன்று நீங்கும்;
எழுபது போகநீக் கிருப்பன முப்பதே;

இன்பம் துன்பம் நிலையாமை

அவற்றுள்,
இன்புறு நாளும் சிலவே; அதா அன்று,
துன்புறு நாளும் சிலவே; ஆதலால்,
பெருக்கா றொத்தது செல்வம்; பெருக்காற்
றிடிகரை ஒத்தது இளமை; இடிகரை
வாழ்மரம் ஒத்தது வாழ்நாள்; ஆதலால்,

நாளை எனாது நல்லது செய்க

ஒன்றே செய்யவும் வேண்டும்; அவ்வொன்றும்,
நன்றே செய்யவும் வேண்டும்; அந்நன்றும்,
இன்றே செய்யவும் வேண்டும்; அவ்வின்றும்,
இன்னே செய்யவும் வேண்டும்; அவ்வின்னும்
'நாளை நாளை' என்பீர்ஆகில்,

நம்முடை முறைநாள் ஆவதும் அறியீர்;
நமனுடை முறைநாள் ஆவதும் அறியீர்:

கூற்றுவன் செய்கை குறித்துக் கேட்பீர்

எப்போ தாயினும் கூற்றுவன் வருவார்;
அப்போ தந்தக் கூற்றுவன் தன்னைப்
போற்றவும் போகான்; பொருளொடும் போகான்;
சாற்றவும் போகான்; தமரொடும் போகான்;
நல்லார் என்னான்! நல்குரவு அறியான்;
பொல்லார் என்னான்; செல்வரென் றுன்னான்;
தரியான் ஒருகணம்; தறுக ணாளன்
உயிர்கொடு போவன்; உடல்கொடு போகான்;

இறந்தவர்க்காக ஏனோ அழுவீர்

ஏதுக் கழுவீர், ஏழை மாந்தர்காள்!
உயிரினை இழந்ததோ? உடலினை இழந்ததோ?
உயிரிழந் தழுதுமென் றோதுவீர் ஆகில்,
உயிரினை அன்றும் காணீர்; இன்றும்காணீர்;
உடலினை அன்றும்கண்டீர்; இன்றும்கண்டீர்,

உயிரினை இழந்த உடலது தன்னைக்
களவு கொண்ட கள்வனைப் போலக்,
காலும் ஆர்த்துக், கையும் ஆர்த்துக்,
கூறை களைந்து, கோவணங் கொளுவி,
ஈமத் தீயை எரியெழ மூட்டிப்,

பொடிபடச் சுட்டுப், புனலிடை மூழ்கிப்,
போஒய்த் தமரொடும் புந்திநைந் தழுவது
சலமெனப் படுமோ? சதுரெனப் படுமோ?

இறந்தவர் தம்மை ஏந்தி உண்பரா?

பார்ப்பன மாந்தீர்! பகர்வது கேண்மின்!

இறந்தவராயுமை இல்லிடை இருத்திப்

பாவனை மந்திரம் பலபட உரைத்தே
உமக்கவர் புத்திரர் ஊட்டின போதில்,
அடுபசி யாற்குலைந் தாங்கவர் மீண்டு
கையேந்தி நிற்பது கண்டதார்? புகலீர்!
அருந்திய உண்டியால் ஆர்பசி கழிந்தது?

நானிலம் அறியா நால்வகைச் சாதி

ஒட்டியர், மிலேச்சர், ஊணர், சிங்களர்,
இட்டிடைச் சோனகர், யவனர், சீனத்தார்
பற்பலர் நாட்டினும் பார்ப்பனர் இலையால்;
முற்படைத்த தனில்வே றாகிய முறைமைபோல்;
நால்வகைச் சாதிஇந் நாட்டில் நாட்டினீர்;

ஒழுக்கம் ஒன்றே ஓங்கிய குடிமை

மேல் வகை கீழ்வகை விளங்குவ தொழுக்கால்;

பிறப்பில் வேற்றுமை பேசும் பேதமை

பெற்றமும் எருமையும் பிறப்பினில் வேறே;
அவ்விரு சாதியில் ஆண்பெண் மாறிக்
கலந்து கருப்பெறல் கண்ட துண்டோ?
ஒருவகைச் சாதியாம் மக்கட் பிறப்பில்ஈர்

இருவகை யாகநீர் இயம்பிய குலத்துள்
ஆண்பெண் மாறி அணைதலும் அணைந்தபின்
கருப்பொறை உயிர்த்தலும் காண்கின்றிலீரோ?
எந்நிலத் தெந்தவித் திடப்படு கின்றதோ
அந்நிலத் தந்தவித் தங்குரித் திடுமால்

மாறிவே றாகும் வழக்கமொன் றிலையே;
பூசுரர் புணர்ந்து புலைச்சியர் ஈன்ற
புத்திரர் ஆயினோார் பூசுரர் அல்லரோ?
பெற்றமும் எருமையும் பேதமாய்த் தோன்றல்போல்
மாந்தரில் பேதமாம் வடிவெவர் கண்டுளார்?

வாழ்நாள் உறுப்புமெய் வண்ணமோ டறிவில்

வேற்றுமை, யாவதும் வெளிப்படல் இன்றே;

தென்திசைப் புலையன் வடதிசைக் கேகிற்
பழுதற ஓதிப் பார்ப்பா னாவான்;
வடதிசைப் பார்ப்பான் தென்திசைக் கேகின்

நடையது கோணிப் புலையன் ஆவான்;
அதுநிற்க,
சேற்றிற் பிறந்த செங்கழு நீர்போலப்
பிரமற்குக் கூத்திவயிற்றிற் பிறந்த வசிட்டரும்
வசிட்டர்க்குச் சண்டாளி வயிற்றிற் பிறந்த சத்தியரும்

சத்தியர்க்குப் புலைச்சிதோள் சேர்ந்து பிறந்த பராசரரும்
பராசரருக்கு மீன்வாணிச்சி வயிற்றிற் பிறந்த வியாசரும்
ஆகிய இந்நால்வரும்,
வேதங்கள் ஓதி மேன்மைப் பட்டு
மாதவராகி வழங்கினர் அன்றோ!

அருந்தவ மாமுனி யாம்பக வற்கே,
இந்தவா றிணைமுலை ஏந்திழை மடவார்
ஆதி வயிற்றினில் அன்றவ தரித்த
கான்முளை யாகிய கபிலனும் யானே;
என்னுடன் பிறந்தா ரெத்தனை பேரெனில்,

ஆண்பால் மூவர்; பெண்பால் நால்வர்;
யாம்வளர் திறம்சிறி தியம்புவல் கேண்மின்;
ஊற்றுக் காடெனும் ஊர்தனில் தங்கியே
வண்ணார் அகத்தில் உப்பை வளர்ந்தனள்;
நரம்புக் கருவியோர் நண்ணிடும் சோலையில்

பாணர் அகந்தனில் **ஔவை** வளர்ந்தனள்;
குறவர் கோமான் கொய்தினைப் புனஞ்சூழ்
வண்மலைச் சாரலில் **வள்ளி** வளர்ந்தனள்
தொண்டைமண்டலத்தில் வண்டமிழ் மயிலையில்
நீளாண்மைகொளும் வேளாண் மரபுயர்

துள்ளுவரிடத்தில் **வள்ளுவர்** வளர்ந்தனர்;
அரும்பார் சோலைச் சுரும்பார் வஞ்சி
அதிகமான் இல்லிடை **அதிகமான்** வளர்ந்தனன்;
பாரூர் நீடும் ஆரூர் தன்னில்
அந்தணர் வளர்க்க யானும் வளர்ந்தேன்;

ஆதலால்,
மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ?
காற்றும் சிலரை நீக்கி வீசுமோ?
மாநிலம் சுமக்க மாட்டேன் என்னுமோ?
கதிரோன் சிலரைக் காயேன் என்னுமோ?

வாழ்நான்கு சாதிக் குணவு நாட்டிலும்
கீழ்நான்கு சாதிக் குணவு காட்டிலுமோ?
திருவும் வறுமையும் செய்தவப் பேறும்
சாவதும் வேறிலை தரணியோர்க்கே;
குலமும் ஒன்றே; குடியும் ஒன்றே;

இறப்பும் ஒன்றே; பிறப்பும் ஒன்றே;
வழிபடு தெய்வமும் ஒன்றே; ஆதலால்,
முன்னோர் உரைத்த மொழிதவ றாமல்
எந்நாள் ஆயினும் இரப்பவர்க் கிட்டுப்
புலையும் கொலையும் களவும் தவிர்ந்து,

நிலைபெற அறத்தில் நிற்பதை யறிந்து,
ஆணும் பெண்ணும் அல்லதை உணர்ந்து,
பேணி உரைப்பது பிழையெனப் படாது!
சிறப்பும் சீலமும் அல்லது,
பிறப்பு நலம் தருமோ பேதை யீரே!

பாய்ச்சலூர்ப் பதிகம்

கபிலர் அகவல் தோன்றியதற்குப் பின்னே அதைப் போல ஒரு நூல் தோன்றியது; அகவலினும் சிறிய நூலே அது. அதற்குப் பாய்ச்சலூர்ப் பதிகம் என்பது பெயர்.

இப்பதிகம் பாடியவர் உத்தரநல்லூர் நங்கை என்பார். வீறுமிக்க பெண்பாற் புலவர் இவர்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருப்பாச்சில் ஆச்சிரமம் என்னும் ஊர் சார்ந்தது உத்தரநல்லூர். அவ்வூரில் பிறந்தவர் இவர்.

இவரைப்பற்றிய குறிப்புகளைக் கொண்டு இலக்கிய வரலாறு (15ஆம் நூற்றாண்டு) தரும் செய்தி வருமாறு :

"இந் நங்கை நந்தனார் குலத்தில் பிறந்தவர். மிக்க சிறு பிராயத்தில் ஆற்றின் கரையில் இவள் மாடு மேய்த்துக் கொண்டிருந்த சமயம் அங்கு அக்கிரகாரத்தில் இருந்து நீராட வந்த வேதியச் சிறுவன் ஒருவன் வேதம் ஓதி மந்திரம் சொல்லி சந்தி முதலியன செய்வதை இவள் முதலில் வேடிக்கையாகப் பார்த்து வந்து, பின்னர் இவள் பக்தியோடு பார்த்து பல ஆண்டுகளில் தானும் கற்றாள்.

இருவரும் சிறுவயதினர் ஆனமையால் சாதி வேற்றுமை உணர்வு மனத்தில் புகவில்லை. அவன் கற்றுத்தர இவள் கற்றுவரவும் நாளடைவில் அவன் கற்ற வேதமெல்லாம் இவளும் கற்று ஓரளவு பண்டிதையானாள்.

மங்கைப் பருவம் அடைந்தும் மனவிகற்பம் இன்றி இருவரும் கல்வித் துறையில் கலந்து நாள்தோறும் உறவாடி வந்த போது, ஊரார் கண்ணில் படவே, வம்பு தலையெடுத்தது.

இருவரையும் அவரவர் சுற்றத்தார் கண்டித்த போதிலும் இவர்கள் கூட்டுறவு நிற்கவில்லை. பார்த்த அந்தணர் இவள்தான் அந்தணச் சிறுவனைத் தன்பால் இழுக்கிறாள் என்று எண்ணி, ஒருநாள் இரவு தீவர்த்தி முதலியன எடுத்துக் கொண்டு இவளைத் தண்டிக்க இவள் இருந்த சேரியை நோக்கி வந்தார்கள்.

அந்தண இளைஞன் ஓரளவு கோழையாய் இருந்தாலும், இவள் அச்சமின்றி வந்தவர்களைத் தடுத்து நிறுத்தி நல்லறிவு புகட்டினாள். அவனுடைய நட்பினால் இவளுக்கு எல்லாக் கல்வியும் தெரிந்திருந்தமையால் அவர்களோடு சமமாகப் பேசி நல்லறிவு புகட்ட முடிந்தது.

பாய்ச்சலூர் (திருப்பாச்சில் ஆச்சிரமம்) கிராமத்து அந்தணர்களை நோக்கி இவள் கூறிய மொழிகள் விருத்தப் பாடல்கள். இவை நாட்டோடிப் பாடல்போல வழங்கி வந்திருக்கின்றமையால், பிழைகள் மலிந்து சில பாடல்கள் உண்மை வடிவம் எளிதில் புலப்படாமலும் உள்ளன'' என்கிறது.

''பொருள் பொதிந்த சில பாடல்கள் பின்வருவன'' என்று எட்டுப் பாடல்களைக் காட்டுகின்றது.

மேலும் ''சாதியினால் உயர்வு தாழ்வு கூறுவது இயற்கைக்கு முரண் என்றும், பண்பினால் ஒத்துத் தாங்கள் இருவரும் மணம் செய்து கொள்வதைச் சாதி பற்றித் தடுத்தல் தகாதென்றும் வலியுறுத்திக் கூறுவது வெளிப்படை'' என்கிறது இலக்கிய வரலாறு— மு. அருணாசலம்.

பாய்ச்சலூர்ப் பதிகம் 1923ஆம் ஆண்டில் சென்னை வித்யாரத்நாகர அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

பதிகம்

காப்பு

மூலத்தின் மேலே நின்று
　　மூன்றுமண் டலமும் தாண்டிச்
சீலத்தின் வெளியில் வந்து
　　சிலம்பொலி பரமா னந்தக்
கோலத்தின் மேலே நின்று
　　குகனறு முகனைப் பாட
வாலிப ரூப மான
　　ஐங்கரன் காப்ப தாமே!

நூல்

ஓதிய நூலும் பொய்யே
　　உடல்உயிர் தானும் பொய்யே
சாதியும் ஒன்றே ஆகும்;
　　சகலமும் வேற தாமோ?
வேதியன் படைத்த தல்லால்
　　விதியினை வெல்ல லாமோ?
பாதியில் பழியே சூழும்
　　பாய்ச்சலூர்க் கிராமத் தாரே,

உறக்கமேரீ ஊனோ உள்ளம்?
உள்ளதோ புறம்போ சீவன்?
இறப்பது முன்னோ பின்னோ?
ஈன்றது பெண்ணோ ஆணோ?
கறப்பது முலையோ பாலோ?
காண்பது மனமோ கண்ணோ?
பறப்பதும் இறகோ காலோ?
பாய்ச்சலூர்க் கிராமத் தாரே.

வெற்றிலை தாழை வாழை
வித்தொன்று முளைப்ப தொன்றோ?
பற்றிய யோனி பேதம்
பாருளோர் அறிந்தி டாமல்
பெற்றவர் தம்மைத் தேடிப்
பிறந்திருந் திறந்து போனார்;
பற்றிநின் றலைவ தேனோ
பாய்ச்சலூர்க் கிராமத் தாரே.

தீப்படக் கடைந்த கோலும்
சீவனும் சிவனும் வேறோ?
வார்ப்படத் தந்தை தாயர்
மக்களும் சுற்றத் தாரும்
மோர்படக் கடைந்த வெண்ணெய்
மோருடன் கூடா வண்ணம்
பாற்படத் திரள வேண்டும்
பாய்ச்சலூர்க் கிராமத் தாரே.

கொக்குமேல் குடுமி கண்டேன்
கோழிமேல் சூடு கண்டேன்
நெக்குறு வாலும் கண்டேன்
நீரின்மேல் நெருப்புக் கண்டேன்
சற்குலம் என்று சொல்லிச்
சதுமறை பேச வேண்டாம்
பக்குவம் அறிந்து பாரும்
பாய்ச்சலூர்க் கிராமத் தாரே.

வித்தொரு மரத்தை ஈனும்
மரமொரு வித்தை ஈனும்
பெற்றதாய் பிள்ளை ஈனும்
பிள்ளையும் அதனை ஈனும்
உற்றபால் தயிரை ஈனும்
உதிரம்சுக் கிலத்தை ஈனும்
பற்றிநின் றலைவ தேனோ
பாய்ச்சலூர்க் கிராமத் தாரே.

மகங்கொண்ட தேகம் தன்னில்
மற்றொரு சுத்தம் காணீர்
அகங்கண்டும் புறமும் கண்டும்
அவனுக்கே தார மானேன்
சுகங்கண்டு துக்கம் கண்டு
சுக்கில வழியே சென்று
பகங் கொண்ட தேனோ
பாய்ச்சலூர்க் கிராமத் தாரே.

ஊருடன் பார்ப்பார் கூடி
உயர்ந்ததோர் சாலை கட்டி
நீரிலே மூழ்கி வந்து
நெருப்பிலே நெய்யை விட்டுக்
கார்வயல் தவளை என்னக்
கதறிய வேதம் தானும்
பாரைவிட் டகன்ற தேனோ
பாய்ச்சலூர்க் கிராமத் தாரே.

சந்தனம் அகிலும் வேம்பும்
தனித்தனி வாசம் வீசும்
அந்தணர் தீயில் வீழ்ந்தால்
அதன்மணம் வேற தாமோ?
செந்தலைப் புலையன் வீழ்ந்தால்
தீமணம் வேற தாமோ?
பந்தமும் தீயும் வேறோ
பாய்ச்சலூர்க் கிராமத் தாரே.

ஒருபனை இரண்டு பாளை
ஒன்றுநுங்கு ஒன்று கள்ளே
அறிவினில் அறிந்த வற்கே
அதுவும்கள் இதுவும் கள்ளே
ஒருகுலை உயர்ந்த தேனோ
ஒருகுலை தாழ்ந்த தேனோ
பறையனைப் பழிப்ப தேனோ
பாய்ச்சலூர்க் கிராமத் தாரே.

பதிகச் செய்தி

“ஆறுமுகன் வள்ளியை மணந்தவன்; அவனுக்கு உதவியவர் மூத்த பிள்ளையார்” என்பது தொன்மம் (புராணம்) ஆதலால், அறுமுகனைப் பாட ஐங்கரன் காப்பினை வேண்டுகிறார்! பொருந்திய காப்பு இது.

வினாக்களை அடுக்கி மெய்யுரைக்கும் கபிலர் போல உத்தர நல்லூர் நங்கையாரும் வினாக்களை அடுக்கியும் விளக்கம் கூறியும் பதிகம் பாடுகிறார்.

“பாய்ச்சலூர்க் கிராமத்தாரே” என ஒவ்வொரு பாடலும் நிறைதல் பதிக மரபாகும்.

“சாதி வேறுபாடு இல்லை” என்பதைச், “சாதியும் ஒன்றே ஆகும்” என்கிறார்.

சாதி வேற்றுமை காட்டும் குடுமி, கொண்டை என்பவை பார்ப்பனர்க்கு மட்டுமா உண்டு? கொக்குக்கும் கோழிக்கும் கூட உண்டே!

தார் போட்டுக் கட்டும் ‘வால்’ பெருமை அவர்களுக்கு மட்டுமா? அக் கொக்கு கோழிகளுக்கும் உண்டே!

உயர் சாதியார் உடல் என்ன, அழுக்கே அற்றதா?

தாழ் சாதியார் உடல் என்ன, அழுக்கே உற்றதா?

உள்ளத்திலும் உடலிலும் அழுக்கில்லாதவன் அவன் என்பதை அறிந்து, அவனை மணங்கொண்டேன். அதனைப் பிரிப்பதா உங்கள் கடமை?

சந்தனமும் அகிலும் நெருப்பில் மணக்கும்; அந்நறுமணம் சிறந்தது; வேம்பும் மணக்கும்; அதன் மணம் வேறானது! அப்படி அந்தணர் எரியும் போதும், அயலவர் எரியும் போதும் வேறு வேறு மணமாதல் உண்டா?

பதனீர் தருவதும் பாளை; கள் தருவதும் பாளை; பாளையில் என்ன வேற்றுமை? மனிதன் செய்த செயல் தானே வேறாக்கிற்று? சாதியும் அப்படி மனிதரால் ஆக்கப்பட்டது தானே!

இவ்வாறு கூறும் நங்கை,

தமக்குப் பார்ப்பனர் அனைவரும் எதிராக நிற்பதையும் வேத வேள்விச் சாலையில் புறத் தூய்மை கொண்டு அகத்தூய்மை அற்று, நெருப்பிலே நெய்யைக் கொட்டித் தவளை கத்துவது போலக் கதறுகின்றீர். ஆயினும் அவ்வேதம்—உலக வழக்கில் இல்லாமல் ஒழிந்தது ஏன்? உலக நலம் உயிர் நலம் கருதாக் கருத்தால் தன்னைத் தானே அழித்துக் கொண்டது என்பதை, "ஊருடன் பார்ப்பார் கூடி" என்னும் பாடலில் பாடுகிறார்.

காதல் வாழ்வுக்குத் தடை செய்வாரை—பந்தத்தால் தம்மைச் சுட்டெரிக்க வந்தாரை-நோக்கிக் கனல் எரியாக மூண்டு கண்மூடித் தனத்தைச் சுட்டெரிக்கக் கிளர்ந்தது இப் பாய்ச்சலூர்ப் பதிகமாம்.

ஏட்டில் எழுதப்படாமல் பொதுமக்கள் வாக்கில் நின்று, பின்னர் வாழ்வு பெற்றது இப்பதிகம் என்பது இதனை ஓதிய அளவில் புலப்படுகின்றது.

பெண்ணுரிமைப் போராட்டப் பெரு நங்கை உத்தர நல்லூர் நங்கையாம்.

திருவள்ளுவர் தவச்சாலை

வெளியீடுகள்

தமிழ் வளம்—சொல்	உருபா	40	00
திருக்குறள்—கருத்துரை	,,	25	00
திருக்குறளின் தனிப்பெருஞ் சிறப்புகள்	,,	20	00
தமிழர் திருமணம் (பாவாணர்)	,,	20	00
சிற்றருவி (குழந்தையர் பாடல்)	,,	30	00
இன்ப வாழ்வு	,,	16	00
நாடும் மொழியும் நம்மிரு கண்கள்	,,	20	00
மனவளப் பயிற்சி	,,	20	00
வள்ளுவர் வழியில்--தவம்	,,	6	00
வள்ளுவர் வழியில்— வறுமையும் வளமையே	,,	6	00
கபிலர் அகவல்	,,	5	00

வேமன் பிரிண்டர்ஸ், நுங்கம்பாக்கம், சென்னை-600 034.